Volume 1 Issue 1 August 2019 E-ISSN: 2582-2063

# ஆவண இதழ்களில் நடுகற்கள்

**முனைவர் முத்து**
உதவிப் பேராசிரியர், வரலாற்றுத் துறை
அரசு மகளிர் கலைக் கல்லூரி, புதுக்கோட்டை, தமிழ்நாடு, இந்தியா

நடுகல் பற்றிய ஆய்வுகள் அண்டை காலத்தில் மிகுந்து வருகின்றன. தமிழக அரசும், தொல்லியல் துறையும் செங்கம் மற்றும் தருமபுரி பகுதியில் 70க்கு மிகுதியான நடுகற்களை கண்டுபிடித்துள்ளது. இந்நடுகற்கள் கண்டுபிடித்த பின் பல ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. தென்னிந்தியா முழுவதும் நடுகல் வழிபாடு மிகுந்து காணப்பட்டாலும் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் அவ்வழிப்பாட்டின் செல்வாக்கு மிகுதியாக காணப்பட்டது.

ஆவண இதழ்களில் கண்டுபிடிக்கப்பட்டு வெளியிடப்பட்ட ஒன்று முதல் இருப்பத்திஎட்டு தொகுதிகளில் உள்ள நடுகற்கள் தொடர்பான செய்திகளை ஆதாரமாக கொண்டு **“ஆவண இதழ்களில் நடுகற்கள்”** என்ற தலைப்பில் இக்கட்டுரை ஆராயப்படுகிறது. ஆய்வுக்காக (1 முதல் 28) இதழ்களில் உள்ள மொத்தம் 40 வகை நடுகற்களை மாவட்டம் வாரியாகவும், ஆண்டு வாரியாகவும், வரிசைப்படுத்தி கிடைக்கப்பெற்ற செய்திகளை ஆதாரங்களுடன் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய நடுகற்கள் பெரும்பாலும் கி.பி 6-ம் நூற்றாண்டு முதல் கி.பி.19-ம் நூற்றாண்டு வரையிலான கால கட்டங்களில் கிடைக்கப்பெற்ற நடுகற்கள் சாலை ஓரத்திலும், கோவில்களிலும், ஊரின் புறத்தேயும் காட்டு பகுதிகளிலும் காணப்படுகிறது. இத்தகைய நடுகற்களில் உள்ள உருவமானது வீரன் போரிடுவதை போல் உருவத்துடன் கையில் வாள், கத்தி, அம்பு போன்ற அமைப்புடனும், அமர்ந்த நிலையிலும், வீரன் விலங்குகளுடன் சண்டையிடுவதை போலவும்(புலி, பன்றி, யானை) மனிதன் தன் தலையை தானே அறுத்து கொள்வது போல உருவமும், கல்லிலும், பலகை வடிவிலும், எழுத்துடனும், பெயர்களுடனும் காணப்படுகிறது. நடுகல்லில் எழுதப்பட்ட எழுத்து பெரும்பாலும் வட்டெழுத்தும் தமிழிழும் ஒரே ஒரு நடுகல் மட்டும் கன்னட எழுத்திலும் உள்ளது (எ.கா:ஆவண இதழ்-21 பக்கம் -47, கொண்டஹரப்பள்ளி தர்மபுரி மாவட்டம்)

வேலூர் மாவட்டம், வாணியபாடி மாவட்டத்தில் உள்ள அம்பலூர் என்ற கிராமத்தில் கி.பி.9-ம் நூற்றாண்டை சேர்ந்த நடுகற்கள் இரண்டு நாய்களின் உருவத்துடன் கூடிய புடைப்புச் சின்னங்கள் உள்ளது. இச் சின்னங்களை அம்பலூரை சேர்ந்த கோவிற் என்பவரின் நாய்களான முழகனும், பந்திக்காகந்தியும், பன்றிகளை கொன்று இறந்தமைக்காக எடுத்த நடுகல்லாடும் - ஆக வீரர்களுக்கு மட்டுமின்றி விலங்குகளுக்கும் நினைவாக நடுகல் எடுத்தியென்பதை அறிய முடிகிறது.தவிர 40 வகையான நடுகல்லிலும் பல வகைப்பட்ட உருவங்கள் கிடைக்கப்பெற்றாலும்,

வேலூர் மாவட்டம், வாலாசப் பேட்டை வட்டத்தில் உள்ள திருமணஞ்சேரி என்ற கிராமத்தில் கி.பி.10-ம் நூற்றாண்டை சேர்ந்த நடுகல்லில், வீரனின் உருவம் பத்மாசன நிலையில் அமர்ந்துள்ளதை போல் (73ஓ37) அளவுடன் கற்பலகையில் இத்தகைய உருவம் காணப்படுவது சிறப்பாகும்.

குறிப்பிட்ட சில மாவட்டங்களில் அதாவது நாமக்கல், கரூர், விழுப்புரம், திருச்செங்கோடு போன்ற மாவட்டத்தில் கி.பி.6-ம் மற்றும் 16,17-ம் நூற்றாண்டை சேர்ந்த

புலிக் குத்திப்பட்டான் நடுகல் (ஆவ.இ.எண்-18 பக்கம்-19, ஆ-2007)
குறத்திக்கல் மாடம் நடுகல் (ஆவ.இ.எண்-19 பக்கம்-154, ஆ-2004)
குதிரை குத்திப்பட்டான் நடுகல் (ஆவ.இ.எண்-18 பக்கம்-19, ஆ-2007)
நெல் கொரிச்சான் சாமி நடுகல் (ஆவ.இ.எண்-19 பக்கம்-3, ஆ-2008)
பன்றி குத்திக் கல் (ஆவ.இ.எண்-19 பக்கம்-154, ஆ-2008)

புலிக்குத்தி நடுகல் (ஆவ.இ.எண்-20 பக்கம்-148)

இவ்வகை பெயருடன் காணப்படுகிற நடுகற்கள் பெரும்பாலும் கோவில்களில் வழிப்பாட்டில் காணப்படுகிறது – நாமக்கல், கரூர், திருச்செங்கோடு மாவட்டங்களில் மக்கள் நடுகல்லை தெய்வமாக வணங்கும் வழக்கம் பரவலாக காணப்படுகிறது. திருவண்ணாமலை மாவட்டம், காயம்பட்டு கிராமத்தில் கி.பி. 9 மற்றும் கி.பி.14ம் நூற்றாண்டை சேர்ந்த 2 நடுகல்லில் -மெய்கீர்த்தி காணப்படுகிறது. மெய்கீர்த்தியில் காந்த;ர் போர் பற்றியும் இதுவரை வேறு எந்த மெய்கீர்த்தியிலும் இடபெறாத இச் செய்தி, நடுகல்லில் இடம் பெற்றுள்ள மெய்கீர்த்தியில் போர் பற்றிய செய்திகள் முதன் முதலாக கிடைக்கப்பெற்றது சிறப்பான செய்தியாகும். காந்த;ர் போரில் தன்னை எதிர்த்த மலையாளர்களை வெற்றி கொண்டு அவர்களின் தலையை அறுத்தான் என்ற செய்தியை அறிய முடிகிறது மற்றொரு நடுகல்லில் பல்லவர்கள் பற்றிய செய்திகளை கொண்ட மெய்கீர்த்தி காணப்படுகிறது. ஒட்டுமொத்த ஆய்வில் நடுகல் வழிபாடு தென்னிந்தியா முழுவதும் இருந்ததாக சான்றுகள் தமிழகம் முழுவதும் காணப்படுகிறது. குறிப்பாக ஒருசில மாவட்டங்களில் நடுகல் வழிபாடு வழிவழியாக இருந்து வருவதை காணமுடிகிறது. தற்போது சில ஊரின் புறத்தே உள்ள கோவில்களில் வழிப்பாட்டில் நடுகற்கள் இருந்து வருகிறது என்பதை அறிய முடிகிறது.

| வ. எண் | ஆவணம் இதழ் | ஆண்டு | மாவட்டம் வட்டம் ஊர் | நடுகல் | எழுத்து | உருவம் | செய்திகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 18 P-19 | கி.பி.6-7 | கரூர் (Dt) குளித்தலை (வ) தோகமலை பாம்படான் குணம்வடகரை | நடுகல் | வட்டெழுத்து | வீரன் உருவம் | குதிரை குத்திப்பட்டான் போரிட்டு மரணம் |
| 2 | 19 P-1 | கி.பி-7 | திண்டுக்கல் (Dt) வேடசந்தூர் (வ) புளியமரத்துக்கோட்டை | சாலை ஓரம் நடுகல் | ---- | 3 வீரர்கள் உருவம் | ஆநிரைகளை சுமந்து சென்றவர்களை போரிட்டு மீட்க சென்ற போது மரணம் |
| 3 | 20 P-3 | கி.பி-6 | விழுப்புரம் (Dt) சங்கராபுரம் (வ) மல்லாவுரம் | 2நடுகற்கள் | வட்டெழுத்து | வீரன் உருவம் நின்ற நிலை | வீரனின் கையில் ஆயுதம் ஏந்தி நின்ற வண்ணம்(வில், அம்பு) |
| 4 | 15 P-10 | கி.பி-8 | புதுக்கோட்டை (Dt) திருமயம் (வ) வாழைக்குறிச்சி | நடுகல் | எழுத்து | வீரன் உருவம் | (தாயார் நட்டுவித்த நடுகல்) 2 போர் வீரர்கள் காட்சி |
| 5 | 25 P-2 | கி.பி-8 | தூத்துக்குடி (Dt) கோவில்பட்டி(வ) வெள்ளாளன் கோட்டை | நடுகல் | தமிழ் வட்டெழுத்து | 2 வீரனின் உருவம் | 2 வீரனின் உருவம் (சேந்தன் கண்ணன் அவரது மகன் கண்ணன் கோவன்) |
| 6 | 26 P-24 | கி.பி-8 | திருப்பூர் (Dt) திருப்பூர் (வ) சோலைமலை கவுண்டர்பாளையம் | கோயில் அருகில் | வட்டெழுத்து | வீரனின் நினைவாக | (மனைவி எடுத்த நடுகல்)மாட்டு மந்தையை புளியிடம் இருந்து காப்பாற்றி சண்டையிட்டு உயிர் நீத்தார். |
| 7 | 18 P-22 | கி.பி-9 | திருச்சி (Dt) வைரிச்செட்டிபாளையம் | நடுகல் | ---- | வீரனின் உருவம் (ஆநிரைகள் உருவம்) | ஆநிரைசுனை கவர்ந்து சென்ற போது பூசலில் இறந்து போன வீரனின் உருவம் பொறிப்பு |
| 8 | 21 P-11 | கி.பி-9 | திருவண்ணாமலை (Dt) செங்கல் ஏரி(வ) காயம்பட்டு | ---- | ---- | ---- | பல்லவர் மெய்கீர்த்தி உள்ளது. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 9 | 12<br>P-5 | கி.பி-9 | வேலூர் (Dt)<br>திருப்பத்தூர் (வ)<br>கொரட்டி | நடுகல் | ---- | மாரியம்மன்<br>கோவில் அருகில்<br>(வீரன் உருவம்)<br>(குதிரை) | கீழ் பகுதி – வீரன் உருவம் மேல் பகுதி – எழுத்து – போரில் குதிரையில் சென்று குதிரை வீரனை கொன்று தானும் இறந்ததாக செய்தி |
| 10 | 24<br>P-24 | கி.பி-9 | திருவண்ணாமலை<br>செங்கம் (வ) | ---- | ---- | சொரக் குளத்தூர்<br>வேடியப்பன் கோவில்<br>அருகில்(வீரன் உருவம்) | வீரனின் உருவம் - இடது கால் முன் வைத்து வலகரத்தில் குறுவாள் தலைமுடி, தொண்டை, கையில் அம்பு நடுகல் |
| 11 | 15<br>P-49 | கி.பி-10 | திருவள்;ர(Dt)<br>பள்ளிப்பட்டு<br>சுரக்காப்பேட்டை | ---- | ---- | ஆற்றங்கரை அருகில்<br>(வீரன் பத்மாசனம்<br>நிலையாய் அமர்ந்த<br>உருவம்) | கையில் ஆயுதம்.'.உடலில் அணிகலன்கள் - சபதமிட்டு உயிர் நீர்த்ததாக உள்ளது. |
| 12 | 21<br>P-47 | கி.பி-10 | தர்மபுரி (Dt)<br>தர்மபுரி<br>கொண்டஹரப்பள்ளி | 10 நடுகற்கள் | கன்னட<br>எழுத்து | மலையடிவாரத்தில்<br>உள்ளது (குதிரை<br>வீரர்கள்) | வீரனின் கையில் வாள்.'.கத்தி.'.அம்பு.'.குதிரை வீரர்கள் - நடுகல் |
| 13 | 24<br>P-53 | கி.பி-10 | வேலூர் (Dt)<br>வாலாசாபேட்டை(வ) | பத்மாசன<br>நிலை | ---- | கற்பலகை பத்மாசன<br>நிலையில் மனித<br>உருவம் | இடுப்பில் அரை ஆடை வீரனின் இடுப்பில் மூங்கில் வலது.'.இடது கை வானின் இரு முனை பிடித்தப்படி பத்மாசன நிலையில் அமர்ந்த நடுகல் |
| 14 | 21<br>P-9 | கி.பி.9<br>-10 | திருவண்ணாமலை (Dt)<br>சவ்வாது மலை<br>அடிவாரம் | நடுகல் | வட்டெழுத்து | ---- | வீரனுக்கு எடுத்த நடுகல் |
| 15 | 11<br>P-111 | கி.பி-11 | கரூர் (Dt)<br>புஞ்சை புகலூர் (வ)<br>(காவிரி தென்கரை) | ---- | ---- | ---- | "தலை பலி வீரன்" உருவம் 74 உயரம், 58 செ.மீ அகலம் |
| 16 | 19<br>P-3 | கி.பி-11 | விழுப்புரம˙ (Dt)<br>செஞ்சி(வ)<br>நொச்சியூர் | நெல்லுக்<br>கொரிச்சான்<br>நடுகல் | ---- | ---- | மக்கள் எடுத்த நடுகல் |
| 17 | 20 | கி.பி-11 | கரூர் (Dt) | 2 நடுகற்கள் | ---- | ---- | வீரனின் உருவம்.'.கையில் ஆயுதம் நின்ற |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | P-148 | | தொட்டிவட்டி | | | | நிலையில் |
| 18 | 20 P-148 | கி.பி-11 | கரூர் (Dt) அரவக்குறிச்சி(வ) மாமரத்துப்பட்டி | நடுகல் | ---- | ---- | கையில் வாளுடன் தோற்றம் |
| 19 | 20 P-148 | கி.பி-11 | ஈரோடு (Dt) தாராபுரம் (வ) புங்கதுறை | சிவன் கோவில் அருகில் நடுகல் | ---- | ---- | கையில் வாளுடன் வீரன் |
| 20 | 24 P-92 | கி.பி.11-12 | மதுரை (Dt) மேலூர் (வ) கொட்டாம்பட்டி | கருப்பர் கோவில் அருகில் | ---- | ---- | போர் களத்தில் இறந்த 2 வீரர்களுக்கு நடுகற்கள் |
| 21 | 8 P-71 | கி.பி-12 | அம்பாசமுத்திரம் | நடுகல் | ---- | சாலையில் இடபுறம் | 50 அடி உயரம் அளவில் நடுகல் உள்ளது |
| 22 | 15 P-69 | கி.பி-12 | வேலூர் (Dt) குடியாத்தம் (வ) பேரணாம்பட்டி சின்னதாமல்செறு | நடுகல் | வீரன் உருவம் | ---- | 2 அடி.ᐧ.அகலம்.ᐧ.3½ வாள், கேடயத்துடன் போர் வீரன் |
| 23 | 12 P-59 | கி.பி-13 | வேலூர் (Dt) குடியாத்தம் (வ) சின்னதாமல்செறு | நடுகல் | வீரன் உருவம் | ---- | வலபக்கம் திரும்பிய நிலை காதில் குண்டலம்.ᐧ.கையில் கேடயம் - வலது கையில் வாள் (யானையை கொன்று ஊரை காத்த வீரன்) |
| 24 | 19 P-152 | கி.பி-14 | நாமக்கல் (Dt) கிரம்பூர் | நடுகல் | வாள் ஏந்திய வீரன் | கோவில் அருகில் | எட்டுக்கை அம்மன் கோவில் அருகில், கோவிலுக்கு நிலம் தானமாக கொடுத்தவர் நினைவாக வைத்த நடுகல் |
| 25 | 21 P-10 | கி.பி-14 | திருவண்ணாமலை (Dt) செங்கல் ஏரி(வ) காயம்பட்டு | நடுகல் | வட்டெழுத்து | ---- | இதுவரை வேறு எந்த நடுகல்லிலும் இடம் பெறவில்லை – இராஜராஜணன் மெய்கீர்த்தி இடம் பெற்ற நடுகல் -தன்னை எதிர்த்த மலையாளர்களை வெற்றி கொண்டு |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | தலையை அறுத்தான் - செய்தி |
| 26 | 19<br>P-154 | கி.பி-16 | பரமத்தி வேலூர் மணப்பள்ளி | கருப்பனார் கருப்பசாமி நடுகல் | ---- | ---- | வீரன் நீண்ட ஈட்டியுடன் காட்சி |
| 27 | 19<br>P-154 | கி.பி-17 | பரமத்தி வேலூர் வாழவந்தி | தலைப்பகுதி இல்லை | ---- | ---- | ஊர் காவலனாக இருக்கலாம் |
| 28 | 19<br>P-153 | கி.பி-17 | பரமத்தி வேலூர் வில்லபாளையம் | வில் வீரன் நடுகல் | ---- | ---- | "எல்லை கருப்பன்" நடுகல் என்பர் - வில், கத்தி அணிகலன்களுடன் காட்சி |
| 29 | 19<br>P-153 | கி.பி-17 | பரமத்தி வேலூர் வில்லபாளையம் | ---- | ---- | கோவில் அருகில் | வழிப்பாட்டில் உள்ள குதிரை வீரன் நடுகல் |
| 30 | 19<br>P-97 | கி.பி-19 | விருதுநகர் (Dt) சிவகாசி, கொத்தனேரி | நடுகல் | ---- | (பாம்பு, நாய் உருவம் உள்ளது) | பெண் புடைப்பு சிற்பம் மாரியம்மாள் இறந்ததாக செய்தி கூறப்பட்டுள்ளது |
| 31 | 19<br>P-16 | ---- | திண்டுக்கல் (Dt) நிலக்கோட்டை (வ), தாதப்பட்டி | நடுகல் | ---- | ஈமச்சின்னம் | உயரம் -180செ.மீ 60 அகலம் (அகம் 269) ஈமச்சின்னத்தில் அருகில் நடப்பட்டுள்ளது |
| 32 | 19<br>P-155 | கி.பி-17 | திருசெங்கோடு மேல்சாத்தம்பூர் | குறத்திக்கல் | ---- | ---- | காளியம்மன் கோவில் அருகில் |